

விருதுநகர் மாவட்டம் நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, தலைமையில் கலைஞர் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் 2025–2026 ஆம் ஆண்டிற்கு கூடுதலாக ரூ . 3.53 கோடி மதிப்பில் 101 வீடுகள் கட்டுவதற்கு அனுமதி ஆணையினை நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பயனாளிகளுக்கு வழங்கினார்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்திற்குட்பட்ட சிறுகூடல்பட்டி கிராமத்தில், தாட்கோ சார்பில் பழங்குடியினர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் நரிகுறவர் இனத்தைச் சார்ந்த பயனாளிகளுக்கு வீடு கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். உடன் தாட்கோ செயற்பொறியாளர் (மதுரை கோட்டம்) மூர்த்தி, திருப்பத்தூர் வட்டாட்சியர் மாணிக்கவாசகம், தாட்கோ உதவி பொறியாளர் உட்பட பலர் உள்ளனர்.

### அன்புச் செழியன் தலைமையில் – கோவை மாநகர் மாவட்ட

# தி.மு.க.வழக்கறிஞர் அணி சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## மூத்த வழக்கறிஞர்கள் கே.எம்.தண்டபாணி,பி.ஆர்.அருள்மொழி பங்கேற்பு!

கோவை மார்ச்: 4

கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி சார்பில் முதல்வர் மு. க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை மூத்த வழக்கறிஞர்கள் கே. எம். தண்டபாணி,பி ஆர். அருள்மொழி முன்னிலையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்ட தி.மு.க.வழக்கறிஞர் அணி சார்பில் கோவை மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் அன்புச் செழியன் தலைமையில் தி.மு.க. சட்டத்துறை மாநில இணைச் செயலாளர்கள் மூத்த வழக்கறிஞர் கே.எம்.தண்டபாணி, மூத்த வழக்கறிஞர் பி.ஆர்.அருள்மொழி, ஆகியோர் முன்னிலையில் கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தின் முன்புறம் பட்டாசு வெடித்தும் பொது மக்களுக்கும் வழக்கறிஞர்களுக்கும் இனிப்புகள் வழங்கியும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் வழக்கறிஞர் அணித் தலைவர் மருது பாண்டியன், ஒருங்கிணைந்த நீதிமன்ற வழக்கறிஞர் அணி தலைவர் கனகராஜ், துணை அமைப்பாளர்கள் ஆசைத்தம்பி, விக்ரம், எலிசபத் ராணி, மதிவாணன், ராஜன், மற்றும் நீதிமன்ற அமைப்பாளர் டி.ரவிச்சந்திரன், முன்னாள் அமைப்பாளர் மயில்வாகனன்,

வழக்கறிஞர்கள் ராஜப்பன், ரவிச்சந்திரன், சந்திரமோகன், முனீர், அன்வர்தீன், அரசு வழக்குரைஞர்கள் சிவக்குமார், கிருஷ்ணமூர்த்தி, கண்ணன், முத்துவிஜயன், ராஜமாணிக்கம், விஜயகுமார் மற்றும் குணசேகரன், தீபக்மது, மணிமாறன், ஈஸ்வரன், வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் ராஜேஷ்குமார், கோகிலவாணி, மற்றும் சி.என்.சந்திரன், முத்துகுமார், அமுல்ராஜ், முருகானந்தம், ரீஹரி, லிங்காஜா, தமிழ்செல்வி, மணிமேகலை, ஜீவா, செண்பகவள்ளி, சுகன்யா,லலிதா, விசாலாட்சி,சித்ரா உள்ளிட்ட மூத்த வழக்கறிஞர்கள்,மகளிர் வழக்கறிஞர்கள், இளம் வழக்கறிஞர்கள் என 200க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

### பொதுச் செயலாளர் ச.உ.பிரபாகர் தலைமையில்

# அரசு அச்சக தொ.மு.ச. சார்பில் முதல்வர் பிறந்தநாள் விழா!

## நல உதவிகள் வழங்கல்!

சென்னை, மார்ச் 4 -

அரசு அச்சக தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் அரசு ஊழியர்களின் வாழ்வில் ஒளியேற்றி நீண்ட நெடுநாட்களாக வழங்கப்படாமல் இருந்த ஈட்டிய விடுப்பினை சரண் செய்வது மற்றும் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக எட்டாக் கனியாக இருந்த பழைய ஓய்வூதிய திட்டத்தினை - டேப்ஸ் ஓய்வூதிய திட்டமாக அறிவித்த தமிழக முதல்வர், கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு அரசு மைய அச்சக தலைவாயிலில் 2.3.2026 அன்று, அரசு அச்சக தொ.மு.ச. பொதுச் செயலாளர் ச.உ.பிரபாகர் தலைமையில் 500 நபர்களுக்கு உணவளித்து அச்சக தொழிலாளர் மற்றும் பொதுமக்கள் 1000 நபர்களுக்கு இனிப்புகள் வழங்கியும் கொண்டாடப்பட்டது.

தலைவர் பிறந்தநாள் விழாவினை மதுரை கிளை அச்சக தொ.மு.ச. செயலாளர் ரவிச்சந்திரன், தலைவர் செல்வக்குமார் தலைமையிலும், சேலம் கிளை அச்சக தொ.மு.ச. செயலாளர் சரண்ராஜ், தலைவர் முத்துமணி தலைமையிலும் விருத்தாச்சலம் கிளை அச்சக தொ.மு.ச. செயலாளர் வேல்முருகன், தலைவர் லோகநாதன் தலைமையிலும், 200 வெல்வோம் மீண்டும் தமிழகத்தின் முதல்வராக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களே தொடரவும் சபதமேற்று சிறப்பாக கொண்டாடப்பட்டது.

சென்னை தங்கசாலை அரசு மைய அச்சக தொ.மு.ச. சார்பில் பொருளாளர் ஜெய்சங்கர், துணைப் பொருளாளர் நாகராஜன், இணைச் செயலாளர்கள் டி.குமார், என். நாராயணன், துணைத் தலைவர்கள் கு. மனோகரன், ஏ.ரவிச்சந்திரன், என்.பெருமாள், பி.எஸ். வெங்கடேசன், இ.மஞ்சுளா, வி.ராணி, வி.லோகநாதன், ஜெ.துரை பாபு, என். ஸ்டாலின், பி.சீனிவாசன், எல்.என்.ராஜ்குமார், பி. புனிதன், டி. பாலகிருஷ்ணன், அலுவலக செயலாளர் சுகுமார், அலுவலக ஆலோசகர் ரவி, குப்புசாமி மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கமலநாதன், ஜெகன் நாதன், ரஞ்சித்குமார், சமீர் ரிச்சர்ட்டு, தினேஷ், ஷீலா மற்றும் அச்சக தொழிலாளர் சகோதர சகோதரிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டுசிறப்பித்தனர்.



கடலூர் மேற்கு மாவட்டம், பண்ருட்டி நகர தி.மு.க. சார்பில் முதலமைச்சர் அவர்களின் 73 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு ஏழை, எளிய பொதுமக்கள் 5 ஆயிரம் நபர்களுக்கு மாபெரும் உணவு வழங்கும் விழா பண்ருட்டியில் நடைபெற்றது. பண்ருட்டி நகர கழக செயலாளர், நகர மன்ற தலைவர் க.இ ராஜேந்திரன் தலைமை தாங்கினார். கடலூர் மேற்கு மாவட்ட கழக அவைத்தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் முன்னிலை வகித்து உணவு உள்ளிட்ட நலத்திட்டங்களை வழங்கினார். ஆர் .எஸ். எம். தணிகை செல்வம், ஆனந்தி சரவணன், ஜீ. கதிர்காமன், ப .குணா ,ஆர். ராஜா, ஆர். கே. ராமலிங்கம் ,கௌரி அன்பழகன், ஆர். டி. ஆர். பிரபு, வழக்கறிஞர்கள் பரணி சந்தர்,நாராயணன், எம் .எஸ் ராம்குமார் , ஆ .சங்கர்,சீனிவாசன், சசிகுமார், இளைஞரணி சம்பத்,கே.பாலசந்தர் மாணவரணி பார்த்திபன்,பிரபு, உள்ளிட்ட கழக நிர்வாகிகள்,சார்பு அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### என்.கௌதமன் தலைமை! கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதியில்

# ‘தமிழ்நாடு தலைகுனியாது’ சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## கழக அயலக அணி செயலாளர் எம்.எம். அப்துல்லா சிறப்புரை!

நாகை, மார்ச் 4 -

நாகை மாவட்டம் கீழ் வேளூர் சட்டமன்ற தொகுதி தமிழ்நாடு தலைகுனியாது ஸ்டாலின் தொடரட்டும் ... தமிழ்நாடு வெல்லட்டும்! திராவிட மாடல அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் திருக்குவளை கடை வீதியில் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு நாகை மாவட்டக் கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் தலைமை தாங்கினார். கீழையூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சோ. பா.மலர்வண்ணன் வரவேற்றார்.

கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் இரா.சங்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க. இராஜேந்திரன், பகோவிந்தராசன், ஒன்றிய கழக செயலாளர்கள் கீழ்வேளூர் தெற்கு கே. பழனியப்பன், கீழையூர் கிழக்கு ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், மாவட்ட கழக துணை செயலாளர் கற்பகம் நீலமேகம், பேரூர் கழக செயலாளர்கள் கா. அட்ச யலிங்கம் மரிய சார்லஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் தி.மு.க.அயலக அணி செயலாளர் எம். எம். அப்துல்லா கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

கூட்டத்தில் பொதுக் குழு உறுப்பினர்கள் இல. பழனியப்பன், கோ.சிவகுமார், ஒன்றிய குழு முன்னாள் தலைவர் மு.ப. ஞான சேகரன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அ பாரிபாலன், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் பி தியாகராஜன், கணேசன். செந்தில், ஜோதிபாசு,

கீழையூர் மேற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் எஸ்.கே.பார்த்திபன், கே. சுரேஷ், ஜெயந்தி மாசிலாமணி, எஸ்.வடுகநாதன், பி.நிர்மல்ராஜ், என்அசோக்குமார், வி.எஸ். குமார், கீழையூர் கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் ஆர்.சுப்பிரமணியன், ம. அரு ள்செந்தில், இரா. ரவிச்சந்திரன், அனுசியா ஜோதிபாசு, கே.முருகன், இராம. இளம்பரிதி, மு.நரசிம்மன், நாகை தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் ஆர்.சீனிவாசன், என். பிச்சை,

ஆர்.காமராஜ், வி.திருநாவுக்கரசு, ராஜேஸ்வரி, கேதமிழ்செல்வன், கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் தங்க.மனோகரன், அ.வேதநாயகம், ரவிக்குமார், ஆர்.நடராஜன், சேக் முகமது, சி.வீரமணி, கீழ்வேளூர் தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் எஸ்.சிவகுமார், கே.மதியழகன், பா.உமா, கே. கணேசன், எஸ்.புருஷோதமதாஸ்,

ஆர்.கே.கண்ணன், கீழ் வேளூர் பேரூர் நிர்வாகிகள் ஷாஜகான், மோ.பிரசாத், சேதுலட்சுமி, மதன், ஆர்.மணிமாறன், ஆர்.ரெங்கராஜ், ஆர். கல்யாணசுந்தரம், ஆர். கோபிநாத், எம்.அமுல், ராஜகோபால், ஜி. ராஜர,வேளாங்கண்ணி பேரூர் நிர்வாகிகள் எம். சிங்கராயர்,

கே.வேத ரத்தினம், கே.கலையரசன், ஜே.லில்லிரோஸ், ஏ.ஆர்.ராஜா இரா. மாரிமுத்து, கே.சார்லஸ் மற்றும் கிளை, வார்டு கழக நிர்வாகிகள் சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

முடிவில் கீழையூர் மேற்கு ஒன்றிய கழக அவைத்தலைவர் வை.சண்முகசுந்தரம் நன்றி கூறினார்.

# கொளத்தூரில் முதல்வர் பிறந்த நாள் விழா!

சென்னை, மார்ச் 4 –

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கொளத்தூர் மேற்குப்பகுதியில், மக்கள் முதல்வரின் மனித நேய விழாவை முன்னிட்டு ”மனித நேய விழா 22, செந்தமிழ் உணர்வு உதிரத்தில்! திராவிட மாடல் சிகரத்தில்! எனும் தலைப்பில், மாபெரும் இரத்ததான முகாம், சென்னை, பெரியார் நகர், கார்த்திகேயன் சாலை, திருவள்ளுவர் திருமண மண்டபத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் மாவட்ட அயலக அணி அமைப்பாளர் ஆர்.எஸ். சித்திக் தலைமையில் நடைபெற்ற மாபெரும் ரத்ததான முகாமை ENT. சிகிச்சை நிபுணர் மோகன் காமேஷ்வரன் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

உடன் ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி,கே.சந்துரு, பரிதிஇளம்சுருதி எம்.சி, , எஸ்.தனசேகர், துரைகண்ணன், ம.அசோக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் செயல் வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா என். இராமசாமி

### மார்ச் 4 (2022)



தனது இளம் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

தஞ்சை நகரத்தில் வட்ட பிரதிநிதி, வட்டக் கழகச் செயலாளர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

1962ம் ஆண்டு தஞ்சை சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற தேர்தலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் போட்டியிட்டபோது, வாக்குச் சாவடி முகவராக பணியாற்றியவர்.

1976 நெருக்கடி காலத்தில் ‘ஜனநாயக கொலைகாரி இந்திரா ஒழிக’ என வாசகத்தை சுவர்களில் எழுதியதால், உள்நாட்டு தேசிய பாதுகாப்பு (மிசா) சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு திருச்சி மத்திய சிறையில் ஒன்பது மாதம் தனிமை சிறைவாசம் அனுபவித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.